**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பழனி.**
**O.S. No. 100 /2024**
**மற்றும்**
**O.S. No. 4 /2024**

**வாக்குமூலம்: வா.சா.1 – சுப்பிரமணியன்**

**17.03.2026 : சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு, பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:**

பிரதிவாதி செல்வராஜ் எனது இளைய சகோதரர் என்றால் சரிதான். மூத்த சகோதரர் முத்துச்சாமி என்றால் சரிதான். நாங்கள் மூன்று பேரும் சேர்ந்து தான் கடந்த 22.03.2006 ஆம் தேதி பாகப்பிரிவினை பத்திரம் எழுதி பதிவு செய்து கொண்டோம் என்றால் சரிதான். நாங்கள் மூன்று பேரும் கடந்த 27.06.1994 ஆம் தேதிய பாகப் பிரிவினை பத்திரத்தின் படி கிடைத்த சொத்துக்களை தான் பாகப் பிரிவினை செய்து பிரித்துக் கொண்டோம் என்றால் சரிதான். கடந்த 27.06.1994 ஆம் தேதிய பாகப் பிரிவினை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆன பாகப்பிரிவினை ஆவணத்தில் அடிப்படையில் தான் இந்த வழக்கு தாக்கல் செய்து அதன் அடிப்படையில் தான் இவ்வழக்கில் பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் பாதை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.

2. பாகப் பிரிவினை பத்திரத்தின் படி பாதை உரிமைக்காகவும், மழைநீர் கழிவுகள் செல்வதற்கான பாதை உரிமையையும் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி உரிமைகளை பிரதிவாதி மறுத்ததால் தான் இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.2ன் படி ஏ பாகச் சொத்துக்கள் முத்துச்சாமிக்கும், பி பாக சொத்துக்கள் எனக்கும், சி பாக சொத்துக்கள் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். இவ்வழக்கில் முத்துச்சாமி எந்த தொடர்பும் இல்லாததால் அவரை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த பிராது பரிகாரத்தில் எந்த இடத்திலும் பாதை என்று குறிப்பிட்டு பரிகாரம் கோரவில்லை என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை ஆவணத்தில் பாதை உரிமையோ, மழைநீர் கழிவு வசதியுரிமையோ உள்ளது என்று சொத்து விபரத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரப்படி இல்லாத உரிமையைக் கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

(பிரதிவாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒம்/–சு.அபூர்வா,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பழனி.